செ.வெ.எண் :628 நாள்: 27.09.2021

**பத்திரிக்கைச் செய்தி**

பெண் குழந்தைகளின் நலனுக்காக தமிழ்நாட்டில் பல்வேறு சமூக பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது போன்று அஞ்சல் துறையால் அஞ்சலகங்கள் மூலம் "செல்வமகள் சேமிப்புத் திட்டம்" என்ற பெண் குழந்தைகளுக்கான சமூக பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

- இத்திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் 10 வயதிற்கு மேற்படாத பெண்குழந்தைகளுக்கு கணக்கு துவங்கலாம்.
- இந்தத் தொகைக்கு 7.6 சதவீதம் வட்டி வழங்கப்படுகிறது.
- குறைந்தபட்சத் தொகையாக ரூ.250/- செலுத்தி கணக்கு துவங்கலாம்.
- அதன்பின் 50-இன் மடங்குகளில் தொகையை செலுத்தலாம்.
- ஒரு நிதியாண்டிற்கு ரூ.250/- முதல் ரூ.1,50,000/- வரை தொகை செலுத்தலாம்.
- கணக்கு துவங்கப்பட்ட நாளிலிருந்து பெண் குழந்தைகள் 15 வயது அடையும்வரை தொகையை செலுத்தலாம்.
- பெண் குழந்தைகளின் உயர்கல்வி செலவுக்காக 50 சதவீதத் தொகையை திரும்பப் பெறலாம்.
- கணக்கு துவங்கிய 21 ஆண்டுகள் அல்லது திருமணம் இவற்றில் எது முந்தையதோ அப்போது கணக்கு முதிர்வடையும்.
- வருமான வரிச்சட்டம் பிரிவு 80சி-இன் கீழ் கழிவு உண்டு.

எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் தங்கள் பெண்குழந்தைகளுக்கு மேற்படி திட்டத்தின் கீழ் கணக்கு துவங்கி பயன் பெறும்படி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப. கேட்டுக் கொண்டுள்ளார்.

செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.